# கதம்பம்

ஏப்ரல் 2023 | திருவள்ளுவர் ஆண்டு 2054



## சொர்க்கமே என்றாலும்

அது நம்ம ஊரை போல வருமா?

வட சென்னை முதல் கன்னியாகுமரி வரை பார்ப்போம் வாங்க!!!

தமிழ் புத்தாண்டு சிறப்பிதழ்

# இந்த இதழில்...


- அறிவிப்பு மடல்
- செட்டிநாடு
- திரையும் இசையும்
- விளையாட்டு - கண்டுபிடி
- மதுரை மாநகர்
- சிவசைலம்
- கண்ணனின் வைர வரிகள்
- திருவாரூர்
- விடுகதைகள்
- எட்டயபுரம்
- மூளைக்கு வேலை
- வடசென்னை:என் பார்வையில்!
- கன்னியாகுமரி
- இராஜபாளையம்
- படிங்க!சிரிங்க!
- தமிழ்ப்பள்ளி மாணவர்கள்
- தமிழ்ப்பள்ளி புகைப்படங்கள்
- நன்றியுரை

# அறிவிப்பு மடல்


RICHMOND TAMIL SANGAM
ஒற்றுமையே உயர்வு
RTS Presents
கலைச் சாரல்
Kids Event
Entry free
Singing | Dance | Drama | Fashion show
Saturday 6th May 2023
3pm - 7pm
Venue: pocahontas middle school
(Members only event)
For enquiry Contact:
rts.allevents@gmail.com
Tea (for adults) and Juice (for kids) will be provided
Pizza available for a nominal price

— RTS presents —

# SUMMER CAMP

## 2023

**FRI 06/09/23 - SUN 06/11/23**

2 Nights



GAMES I MUSIC I FUN I ADVENTURE

## LOCATION: KIPTOPEKE STATE PARK

**Camping full information will be announced soon...**

கடந்த மாதம் மகளிர் சிறப்பிதழ் மிகவும் சுவாரசியமாக இருந்தது. எனது ஆசைப்படி பல பெண் எழுத்தாளர்கள் கை வண்ணத்தில் மகளிர் மலர் மலர்ந்தது. உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளும், பாராட்டுக்களும். எல்லா மாதமும் கதம்பம் இதழுக்காக புது எழுத்தாளரை கண்டறிவது, அவர்கள் எழுத உற்சாகப்படுத்துவது என கதம்பம் இதழுக்காக மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படும் நிர்வாக குழு உறுப்பினர்களுக்கு நான் எனது நன்றிகளை கூறியே ஆக வேண்டும்.

மகளிர் சிறப்பிதழ் வெற்றியை முன்னிட்டு, இம்மாத கதம்பம் தமிழ் புத்தாண்டு சிறப்பிதழாக வெளியிடப்படுகிறது. இந்த மாதம் உங்கள் சிறு வயது நினைவுகளை நியாபகப்படுத்தி, மிகவும் அழகாக உங்க ஊரை பற்றி எழுதி அனுப்பிய எழுத்தாளர்களுக்கு கோடி நன்றிகள். அமெரிக்காவில் வாழும் நம் அடுத்த தலைமுறை செல்வங்களுக்கு நாம் வளர்ந்த ஊரை பற்றி தெரிந்து கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும்.

-சிவசக்தி அறிவுக்கண்ணன்

கதம்பம் மாத இதழில் வெளியிடப்படும் தகவல்கள் யாவும் எழுத்தாளர்களின் சொந்த கருத்துக்கள் ஆகும். இதற்கு இரிச்மண்ட் தமிழ் சங்கம் பொறுப்பல்ல.

# செட்டிநாடு



என் பெயர்  மெய்யப்பன். நான்,என் குடும்பத்துடன், ரிச்மன்ட்டில் கடந்த 15 வருடங்களாக வசித்து வருகிறேன். என்னுடைய சொந்த ஊர், செட்டிநாட்டில் உள்ள காரைக்குடி என்ற தொன்மை வாய்ந்த நகரம்.

இந்த கட்டுரையின் மூலம், செட்டிநாட்டை பற்றிய சிறப்புவாய்ந்த செய்திகள் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் பெருமை கொள்கிறேன். சாதி மத பேதமின்றி அனைத்து மக்களும் ஒற்றுமையாக வாழுகின்ற ஒரு அற்புதமான பகுதி, எங்கள் செட்டிநாட்டு பகுதி.

'செட்டிநாடு' என்று சொன்னவுடன், பலருக்கு உடனே நினைவில் வருவது செட்டிநாட்டு பலகாரங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. குழி பணியாரம், கை முறுக்கு, அதிரசம், கந்தரப்பம்... இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம். சொல்லும்போதே உண்ணும் ஆசையை தூண்டுகிறதல்லவா?

"என்னடா இது.. வெறும் பலகாரத்திற்கு பேர்போன ஒரு பகுதியை இவ்வளவு உயர்வா பேசுவதா?" என்று நினைத்து விட வேண்டாம். செட்டிநாட்டு கட்டிட கலையை பற்றி, இங்கு குறிப்பிட்டேயாகவேண்டும்.  பழமையான, நேர்த்தியான மற்றும் கலையம்சம் மிகுந்தது, எங்கள் கட்டிடகலை. இன்றும் இது போன்ற பிரம்மாண்டமான வீடுகள், கம்பீரமாக வீற்றிருப்பதை, நீங்கள் எங்கு சென்றாலும் பார்க்க நேரிடும். அவை கண்கொள்ளா காட்சியாக அமையும் என்பதில் எந்த ஒரு ஐயப்பாடும் இல்லை.

பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, சிவகங்கை, காளையார்கோவில் போன்ற பிரசித்திபெற்ற பல புண்ணியஸ்தலங்களை உள்ளடக்கியது எங்கள் செட்டிநாட்டு பகுதி. ஆண்டு முழுவதும், உலகின் பல பகுதிகளிலிருந்து பக்தர்கள் வந்து செல்வதை நீங்கள் எப்போதும் காணலாம்.



வேலு நாச்சியார், மருது சகோதரர்கள் போன்ற வீரத்திற்கு பெயர் போனவர்களையும் , வள்ளல் அழகப்பர், கவிஞர் கண்ணதாசன் போன்ற ஊர் போற்று மேதைகளையும் இத்தேசத்திற்க்கு தந்தது எங்கள் ஊர் தான்.

தமிழுக்கென்று தனியாக ஒரு கல்லூரியை முதன் முதலில் நிறுவியது எங்கள் ஊரில் தான்.
கவியரசர் கம்பருக்கு மணி மண்டபம் காட்டியதும் எங்கள் ஊரில் தான்.
தமிழ்  தாய்க்கு கோவில் காட்டியதும் எங்கள் ஊரில் தான்.

இப்படி எங்கள் ஊரின் பெருமைகள் மற்றும் அடையாளங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

இக்கட்டுரையின் மூலம், நீங்கள் அனைவரும் வாய்ப்பு கிடைக்கும்போது, கண்டிப்பாக எங்கள் ஊருக்கு வருகை தர வேண்டும் என்று அன்போடு வேண்டிக்கொள்கிறேன். 'செட்டிநாடு' உங்களை அன்போடு வரவேற்க, எப்போதும் தயாராக இருக்கிறது.

எங்கள் ஊர் பக்கம் வாங்க, பழகலாம் !! பழகுவதற்கு இனிமையானவர்கள் நாங்கள்.

'செட்டிநாடு' என்று சொன்னாலே, கெத்துதான்.

-மெய்யப்பன்

# திரையும் இசையும் - கல்யாணி (பாகம் 1)

இது **65** ஆம் மேளகர்த்தா ராகம்.

Arohanam: S R2 G3 M2 P D2 N3 S
Avarohanam: S N3 D2 P M2 G3 R2 S

கர்நாடக சங்கீதத்தில் இந்த ராகத்தில் பிரபலமான பாடல்களின் எண்ணிக்கை மிக அதிகம். இந்த ராகத்தில் அமைந்த திரைப்பட பாடல்களின் எண்ணிக்கையும் அப்படியே தான். அதனால் இந்த ராகத்தை பல பாகங்களாக தொகுத்து வழங்க உள்ளோம்.

இந்த பதிவில் தியாகராஜர் இயற்றிய பாடல்களை மட்டும் பட்டியலிடுகிறோம். **நிதி சால சுகமா, ஏதாவுனரா, அம்மா ராவம்மா, பஜன சேயவே, வாசுதேவயனி, ஈஷா பாஹிமாம்** ஆகிய சில அதில் அடக்கம்.

திரைப்படங்களில், இந்த ராகத்தை தழுவி அமைந்த பாடல்களில் ஓர் சில:

| திரைப்படம் | பாடல் | இசையமைப்பாளர் |
|---|---|---|
| அம்பிகாபதி | சிந்தனை செய் மனமே | ஜி ராமநாதன் |
| எல்லோரும் இந்நாட்டு மன்னர் | என்னருமை காதலிக்கு | டி ஜி லிங்கப்பா |
| மன்னிப்பு | வெண்ணிலா வானில் வரும் | எஸ் எம் சுப்பையா நாயுடு |
| திருவருட்ச்செல்வர் | மன்னவன் வந்தானடி | கே வி மஹாதேவன் |
| பேசும் தெய்வம் | நான் அனுப்புவது கடிதம் அல்ல | கே வி மஹாதேவன் |
| பணம் படைத்தவன் | கண் போன போக்கிலே | விசுவநாதன்-ராமமூர்த்தி |
| பலே பாண்டியா | அத்திக்காய் காய் காய் | விசுவநாதன்-ராமமூர்த்தி |
| போலீஸ்காரன் மகள் | இந்த மன்றத்தில் ஓடிவரும் | விசுவநாதன்-ராமமூர்த்தி |
| தங்க பதுமை | முகத்தில் முகம் பார்க்கலாம் | விசுவநாதன்-ராமமூர்த்தி |
| மகனே கேள் | காலை மங்கை உருவம் கண்டு | விசுவநாதன்-ராமமூர்த்தி |
| பார் மகளே பார் | பார் மகளே பார் | விசுவநாதன்-ராமமூர்த்தி |
| நிச்சய தாம்பூலம் | மாலை சூடும் மணநாள் | விசுவநாதன்-ராமமூர்த்தி |
| காத்திருந்த கண்கள் | துள்ளி திரிந்த பெண் | விசுவநாதன்-ராமமூர்த்தி |
| அன்புக்கரங்கள் | இரவு முடிந்துவிடும் | விசுவநாதன்-ராமமூர்த்தி |
| பொண்ணுக்கு தங்க மனசு | தென் சிந்துதே வானம் | ஜி கே வெங்கடேஷ் |
| தவப்புதல்வன் | இசை கேட்டால் புவி | எம். எஸ். விசுவநாதன் |
| பூவா தலையா | மதுரையில் பறந்த | எம். எஸ். விசுவநாதன் |
| தெய்வ மகன் | கேட்டதும் குடுப்பவனே | எம். எஸ். விசுவநாதன் |

**தொகுப்பு : நாராயணன் சுப்ரமணியன்**

# விளையாட்டு - கண்டுபிடி

## கீழுள்ள சொற்களை அட்டவணையில் கண்டுபிடியுங்கள்.

- அரியலூர்
- செங்கல்பட்டு
- சென்னை
- கோயம்புத்தூர்
- கடலூர்
- தர்மபுரி
- திண்டுக்கல்
- ஈரோடு
- கள்ளக்குறிச்சி
- காஞ்சிபுரம்
- கன்னியாகுமரி
- கரூர்
- கிருஷ்ணகிரி
- மதுரை
- மயிலாடுதுறை
-



| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | றி | கா | ஞ் | சி | பு | ர | ம் | த | ஔ | த |
| அ | செ | ங் | க | ல் | ப | ட் | டு | ர் | ய | செ |
| ரி | கோ | க | ண் | ல் | வ | ச் | கி | ம | றை | ன் |
| ய | ய | ன் | க | ச | ஞ | க | ரு | பு | ரை | னை |
| லூ | ம் | னி | ம | ட | க | ரூ | ஷ் | ரி | ஔ | ம் |
| ர் | பு | யா | ர | யி | லூ | ர் | ண | ரி | த | ர் |
| ஈ | த் | கு | ர | க | லா | ர் | கி | ம | ட் | ம |
| ரோ | தூ | ம | பு | ய | கா | டு | ரி | ல | து | து |
| டு | ர் | ரி | லா | ம | ங் | க் | து | ம | ப | ரை |
| அ | தி | ண் | டு | க் | க | ல் | ஆ | றை | ஷ் | னி |
| த் | க | ள் | ள | க் | கு | றி | ச் | சி | ர் | ஈ |

- நாகப்பட்டினம்
- நாமக்கல்
- நீலகிரி
- பெரம்பலூர்
- புதுக்கோட்டை
- ராமநாதபுரம்
- ராணிப்பேட்டை
- சேலம்
- சிவகங்கை
- தென்காசி
- தஞ்சாவூர்
- தேனி



| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ன் | ர் | பெ | ர | ம் | ப | லூ | ர் | னி | ப் | ப் |
| நா | ரா | நா | க | ப் | ப | ட் | டி | ன | ம் | ங் |
| ண | கி | ம | ஒ | தெ | ஊ | ம் | ம | த | ற | ரா |
| ரா | ஆ | ப | நா | ர | ன் | க | ம் | த | க | ணி |
| ர் | சி | பு | டை | த | கா | கா | சி | ஞ் | ட் | ப் |
| பு | ரா | வ | ல | ஊ | பு | ப | சி | சா | நா | பே |
| து | ந | டி | க | ல | ப் | ர | க | வூ | ம | ட் |
| க் | ரா | ம | வ | ங் | அ | து | ம் | ர் | க் | டை |
| கோ | ரி | ர | ம் | பு | கை | ஔ | ர | ர | க | ம் |
| ட் | க் | ம | சே | ல | ம் | ஏ | தே | நா | ல் | இ |
| டை | ங் | நீ | ல | கி | ரி | க் | வ | னி | த | டை |


- தூத்துக்குடி
- திருச்சிராப்பள்ளி
- திருநெல்வேலி
- திருப்பத்தூர்
- திருப்பூர்
- திருவள்ளூர்
- திருவண்ணாமலை
- திருவாரூர்
- வேலூர்
- விழுப்புரம்
- விருதுநகர்



| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| த | ளி | ல | தூ | தி | கு | ர் | ந | தி | த் | தி | ள் |
| லி | ழ | தி | ட | ஈ | ரு | பு | ர் | ண | அ | ரு | தி |
| ச | தி | ழ | ரு | உ | தி | வ | ஆ | கு | ரு | வா | ரு |
| தூ | ரு | ர் | வே | ப் | தி | ஔ | ண் | வ | ர் | ளூ | ம |
| த் | ச் | த் | வா | லூ | ப | ரு | ரா | ணா | ஊ | ர் | ப |
| து | சி | ற | ய | எ | ர் | த் | வ | ப | ம | ர் | ப் |
| க் | ரா | டி | ச | தி | ந | தூ | தூ | ள் | ரா | லை | தி |
| கு | ப் | ள் | தி | ளு | ர் | த் | எ | ர் | ளு | தி | தி |
| டி | ப | ம் | வி | ழு | ப் | பு | ர | ம் | ர் | ர் | ர |
| ஆ | ள் | வி | ரு | து | ந | க | ர் | ரு | ழ | லை | ள் |
| நெ | ளி | ர | ங | ல் | ப் | தி | ரு | நெ | ல் | வே | லி |
| து | ளூ | உ | ரு | தி | ரு | ப் | பூ | ர் | ர் | ன | ஐ |

**படைப்பு: ஸ்ரீலதா**

# மதுரை மாநகர்



கி.பி 4-11 ஆம் நூற்றாண்டு பாண்டிய தலைநகரின் தளமாக இருந்த மதுரை மாநகரம் , திண்டுக்கல்லுக்கு தென்கிழக்கே சுமார் 30 மைல் (48 கிமீ) தொலைவில் வைகை ஆற்றின் மீது அமைந்துள்ளது. மதுரை, தமிழகத்தின் இரண்டாவது பெரிய நகரமாகவும் , மூன்றாவது அதிக மக்கள்தொகை கொண்ட நகரமாகவும் விளங்குகிறது. மதுரை தமிழ் சங்க இலக்கியங்களின் இடமாக இருந்து வருகிறது.

**மதுரையின் புனைப்பெயர்கள்:**

இரவு பகல் எந்நேரமும் மக்கள் நடமாடுவதால் "தூங்கா நகரம்" என்றும், நாள் தோறும் விழாக்கள் நடந்து கொண்டே இருப்பதால் "விழா நகரம்" என்றும் , மதுரை எல்லையை அளப்பதற்காக சிவபெருமானின் மேல் இருந்த பாம்பு அதன் வாயில் ஆரம்பித்து வாலால் சுற்றி மீண்டும் வாயால் கவ்விக்கொண்டதால் "ஆலவாய்புரம்" என்றும் , மல்லிகைப்பூவிற்க்கு பெயர் போனதால் "மல்லிகை மாநகர்" என்றும் கூறுவார்கள். மேலும் சங்க இலக்கியங்கள் பற்றி பேசுவதற்காக மக்கள் ஒன்று கூடுவதால் "கூடல் நகரம்" எனவும், இவ்வூரின் நடுவே அருள்மிகு மீனாட்சி அம்மனின் கோவில் இருப்பதால் "கோவில் நகரம் " எனவும் அழைப்பார்கள். மதுரையை அழிக்க வருணன் ஏவிய ஏழு மேகங்களையும் தடுக்கும் பொருட்டு, சிவபெருமான் தன் சடையிலிருந்து விடுத்த நான்கு மேகங்களும், நான்கு மாடங்களாகக் கூடி, மதுரையைக் காத்ததால் “நான்மாடக்கூடல்” என்று பெயர் பெற்றது. மருதை மரங்கள் அதிகம் இருப்பதாலும் மருதை என்ற சொல் மருவி "மதுரை" என்று வந்ததாகவும் கூறுவர்.

**மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்:**

சிவபெருமான் நடனமாடியதாகச் சொல்லப்படும் ஐந்து முக்கிய தலங்களில் மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருத்தலமும் ஒன்று. மற்ற எல்லா இடங்களிலும் இடது காலைத் தூக்கி நடனமாடும் நடராசர், இங்கு வலது காலைத் தூக்கி வைத்து நடனமாடுகிறார். இங்குள்ள மீனாட்சி அம்மன் சிலை மரகதக் கல்லால் ஆனது. எனவே மீனாட்சி அம்மனுக்கு மரகதவல்லி என்று இன்னொரு பெயரும் இருக்கிறது. மதுரையிலுள்ள மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் மீனாட்சி அம்மனை வழிபட்ட பின்பே சுந்தரேசுவரரை வழிபடும் வழக்கம் நீண்ட காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. மீனாட்சியம்மன் கோயிலுக்குள் இருக்கும், சுற்று வீதிகளுக்கு தமிழ் மாதங்களின் பெயர் வைக்கப்பட்டிருப்பதற்கும் ஒரு காரணம் உள்ளது. மன்னர்கள் காலத்தில், குறிப்பிட்ட மாதங்களில் நடைபெறும் விழாக்கள், அந்த மாதங்களின் பெயரிலான தெருக்களில் தான் நடைபெறும்.

**அழகர் கோவில்:**

மதுரை நகரிலிருந்து 21 கி.மீ. தொலைவில் அழகர் மலை அமைந்துள்ளது.அழகர் கோவிலின் முக்கிய கடவுள் பரமசுவாமி ஆவார். முருகனின் அறுபடை வீடுகளில் ஆறாவதான பழமுதிர்சோலை முருகன் கோயில் இங்கு உள்ளது. பிரதான கோபுர நுழைவாயில் எப்போதும் மூடப்பட்டிருக்கும் மற்றும் மூடிய கதவுக்கு பின்னால் உள்ள படிகள் 'பதினெட்டாம் படி கருப்பன்' என்று வணங்கப்படுகிறது. கோயிலின் கதவுகளுக்குள் கருப்பர் வசிப்பதாக நம்பப்படுகிறது. வருடத்திற்கு ஒருமுறை கதவுகள் திறக்கப்பட்டு, சக்கரத்தாழ்வார் மட்டும் திறந்திருக்கும் கதவு வழியாகக் கடந்து செல்வார்.

**சித்திரை திருவிழா :**

மதுரையில் ஆண்டுதோறும் நடைபெறும் சித்திரைத் திருவிழா, ‘திருவிழாக்களின் திருவிழா’ என்ற பெருமையை நிலைநாட்டி வருகிறது. கள்ளழகர் மதுரைக்கு வரும் நிகழ்வு எதிர் சேவை என்று கொண்டாடப்படுகிறது. முக்கிய விழாவாக கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்வு ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. தமிழகம் முழுவதும் இருந்தும், குறிப்பாக தென் மாவட்டங்களில் இருந்தும் 5 லட்சத்துக்கும் மேற்பட்டோர் திருவிழாவிற்கு வந்து செல்கின்றனர். மீனாட்சியம்மன் கோயிலின் கொடியேற்றத்துடன் தொடங்கி, ‘அழகர்’ மலையேறித் திரும்பும் வரை மொத்தம் 16 நாட்கள் நடைபெறும் இந்தத் திருவிழா ஒரு பெரிய பொருளாதார சுழற்சி மற்றும் சமூக தொடர்புக்கு உட்படுகிறது.




**காந்தி நினைவு அருங்காட்சியகம்:**

மதுரையின்  காந்தி நினைவு அருங்காட்சியகம்  கி.பி 1670 இல் 13 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டது. இது ஒரு வரலாற்று கட்டிடமாகும். அருங்காட்சியகத்தின் மிகவும் சுவாரஸ்யமான பிரிவுகளில் ஒன்றான இந்த பகுதியில் மகாத்மா காந்தி பயன்படுத்திய சுமார் 100 கலைப்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இதில் அவர் கொல்லப்பட்ட நாளில் பயன்படுத்திய இரத்தக் கறை படிந்த துணியும் அடங்கும். இந்த துணியானது கண்ணாடி பெட்டியில் கவனமாக பாதுகாக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த அருங்காட்சியகத்தில் காந்தி தனிப்பட்ட முறையில் தேவகோட்டையைச் சேர்ந்த நாராயணன் சத்சங்கிக்கு எழுதிய அசல் கடிதம் உள்ளது.

**திருமலை நாயக்கர் மஹால் :**

கி.பி 1636 இல் எழுப்பப்பட்ட இந்த அற்புதமான கட்டிடம் 1659 வரை நாயக்க மன்னர்களின் அரண்மனையாக இருந்தது. அரண்மனையின் வடிவமைப்பு ஒரு இத்தாலிய கட்டிடக் கலைஞரால் உருவாக்கப்பட்டது. இந்திய அரசு, திருமலை நாயக்கர் அரண்மனையை தேசிய நினைவுச்சின்னமாக அறிவித்தது. அரண்மனையின் முழு அமைப்பும் இலைகள் கொண்ட செங்கல் வேலைகளால் ஆனது, அதே நேரத்தில் ஸ்டக்கோவின் பளபளப்பான மற்றும் மென்மையான அமைப்புக்கு  ஷெல் சுண்ணாம்பு  பயன்படுத்தப்படுகிறது. முற்றத்தின் இருபுறமும் தங்கத்தால் மூடப்பட்ட பந்தல்கள் அழகாக காட்சியளிக்கின்றன. "இருவர்" (1997) திரைப்படத்தின் பல காட்சிகளை இங்கு தான் படமாக்கினர்.



**யானைமலை:**

யானை மலையின் நீளம் சுமார் 4 கி.மீ, அதாவது 4000 மீட்டர் நீளம்,1200 மீட்டர் அகலம், 400 மீட்டர் உயரம் கொண்டது. இம்மலையை சற்று தூரத்தில் இருந்து பார்த்தால் ஒரு யானை படுத்திருப்பது போல தோன்றுவதால் இம்மலை யானை மலை என பெயர் பெற்றுள்ளது. யானை மலையை “நரசிங்கமங்கலம்” என்றும் அழைப்பர். பாண்டிய வம்சத்தின் போது சமண துறவிகள் இங்கு வாழ்ந்தனர். மலையின் உச்சியில் மகாவீரர், கோமதேஸ்வரர் மற்றும் ஜைன துறவிகள் வடிவமைத்த பிற தீர்த்தங்கரர்களின் அடிப்படை சிற்பங்களைக் கொண்ட குகைகளைக் காணலாம். துறவிகள் ஓய்வெடுக்க பயன்படுத்திய கல் படுக்கைகளும் உள்ளன. இந்த மலை கிரானைட் நிறைந்தது.

**மதுரையின் சிறப்புகள்:**

**சுங்குடி புடவைகள்**

சுங்குடி புடவைகள் 'கோலம்' எனப்படும் வடிவியல் அச்சிட்டுகளால் ஈர்க்கப்பட்ட வடிவங்களைக் கொண்டுள்ளன. இந்த புடவைகள் இரண்டு மாறுபட்ட வண்ணங்களை உள்ளடக்கியது. சுங்குடி புடவைகள் 'சுற்றுச்சூழலுக்கு உகந்த' புடவைகள் என்றும் அழைக்கப்படுகின்றன. ஏனெனில் பயன்படுத்தப்படும் சாயம், இலைகளில் இருந்து எடுக்கப்படுகிறது. அவை தூய பருத்தியால் செய்யப்பட்டவை என்பதால், கோடைக் காலத்திற்கு ஏற்றது.

**மதுர மல்லி**

மண்ணும் வானிலையும் ‘மதுரையின் மல்லிகை’யை தனித்துவமாக்குகிறது. பூவின் வாசனை 36 மணி நேரம் வரை அப்படியே இருக்கும். இதழ்கள் தடிமனாகவும், ஈரப்பதத்தைத் தக்கவைக்கும் திறன் ஆரம்பகால வாடுதலை தாமதப்படுத்துகிறது.

**ஜிகர்தண்டா மற்றும் பருத்தி விதை பால்**

மதுரையின் பூர்வீக பானமான "ஜிகர்தண்டா" என்றால் "இதயத்தை குளிர்விக்கும் ஒன்று" என்று பொருள். பால், கடல் பாசி, ஒரு சிறப்பு ஐஸ்கிரீம் மற்றும் நன்னாரி சர்பத் ஆகியவை அடங்கும். கடல் பாசிக்கு பதிலாக பாதாம் பிசின், (பாதாம் மரத்தில் இருந்து பெறப்பட்ட உண்ணக்கூடிய பசை) சேர்த்தால் சுவை அதிகரிக்கும் . இந்த கலவை குளிர்ச்சியாக பரிமாறப்படுகிறது. பருத்தி பால் என்பது பருத்தி விதைகள், தேங்காய், வெல்லம் மற்றும் பச்சை அரிசி ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்படும் இது பல ஆரோக்கிய நன்மைகளைக் கொண்ட மற்றொரு பானமாகும்.









**மல்லிகைப் பூ இட்லியும் , கறி தோசையும்**

உணவின் மென்மையைக் குறிப்பதால் மல்லி பூ இட்லி என்று பெயர் வந்தது. ஒருவர் இந்த இட்லியை ஒருமுறை ருசித்தால், அதன் சுவை அவர்கள் வாழ்நாள் முழுவதும் இருக்கும். தக்காளி, கொத்தமல்லி இலைகள், தேங்காய் சட்னிகள் போன்ற உணவுகள் இட்லியை ருசிக்க சரியான பொருத்தமாக இருக்கும்.

பீட்சா போன்ற உருவாக்கம் உள்ள மதுரை கறி தோசை அடிப்படையில் 3-அடுக்கு தோசையாகும் . முதல் அடுக்கு சாதாரண தோசை, இரண்டாவது அடுக்கு முட்டை ஆம்லெட் மற்றும் மேல் அடுக்கு துண்டு துண்டாக வெட்டப்பட்ட இறைச்சி (மட்டன் கீமா) ஆகியவற்றால் ஆனது.

**பன் பரோட்டாவும் , பர்மா கடை இடியாப்பமும்**

பன் பரோட்டா என்ற பெயர் அதன் கொப்பளிப்பு குறிக்கிறது. பிரபலமான பரோட்டா உணவுக்காக அறியப்படுகிறது. ஆட்டுக்கால் பாயாவுடன் சிறுதானிய இடியப்பம் காலை உணவுக்கு ஏற்ற உணவு. இதை விட, தேங்காய்ப்பால் சேர்த்து சாப்பிட்டால் சுவையாக இருக்கும். மதுரை பர்மா கடை இடியாப்பத்திற்கு பெயர் போனது .

**காணத்தக்கவை**:

அருள்மிகு மீனாட்சி அம்மன் கோவில், தூய மரியன்னை பேராலயம் ,திருமலை நாயக்கர் மஹால் , மாரியம்மன் தெப்பக்குளம்,காந்தி அருங்காட்சியகம்,புது மண்டபம் ,வைகை அணை ,ஆயிரம் கால் மண்டபம் ,கோரிப்பாளையம் தர்கா, மேலும் மதுரையை சுற்றியுள்ள திருப்பரங்குன்றம்,அழகர்கோவில்,யானைமலை,குட்லாடம்பட்டி அருவி,மேகமலை, திருப்புவனம் போன்றவற்றை அனைத்தும் காணத்தக்க இடங்கள் ஆகும்.

"தூங்கா நகரம்" என்ற தலைப்பில் 2011 ஆம் ஆண்டு வெளி வந்த தமிழ்த் திரைப்படம் மதுரையை சுற்றியுள்ள இடங்களிலும் மற்றும் எங்களது உறவினர் வீட்டிலும் படமாக்கப்பட்டது என்ற பெருமை உண்டு.

- **இளமாறன் அன்பழகன்**

# சிவசைலம் : இப்படி ஓர் இடம் இருக்கிறதா...!

பரம கல்யாணி.. இந்த பெயரை வருகை பதிவேட்டில் வாசிக்கும் போது எல்லாம் அச்சிறுமியின் முகம் தொங்கி விடும். சக மாணவர்களின் பராசக்தி பட கல்யாணி வசன கிண்டலை நினைத்து கண்களில் முத்து கோர்த்த நாட்களுக்கு கணக்கில்லை.

பெயரிட்ட பெற்றோரை “ஏன் இப்படி எனக்கு மட்டும்”.. என கோவமாய் கேட்க உதடு வரை வந்த வார்தைகள்.. கண்டிப்பான அப்பாவின் முகத்தை கண்டவுடன் ஆழி அலையில் அடித்து செல்லப்பட்டது  போல் பலமுறை காணாமல் போனதுதான் மிச்சம்.

நீண்ட நாள் காத்திருப்பிற்கு பின் தந்தையிடம் தன் பெயரின் காரணத்தை ஆசிரியர் வினவியதாக சொல்லி... ஒரு வழியாய் விடை தேட முயற்சித்து விட்டாள். தன் செல்ல மகளின் கேள்விற்கு ஆச்சரியப்பட்ட அந்த தந்தை.. தான் சுற்றி திரிந்த இயற்கையின் அழகில் திளைத்திருந்த அந்த ஊரின் நினைவுகளில் கூறிய முதல் வார்த்தை "சிவசைலம்"

**சிவசைலம்**

தென்காசி மாவட்டத்தில் ஆழ்வார்குறிச்சியிலிருந்து 5 கிமீ தொலைவில் வெள்ளிமலை மேற்கு தொடர்ச்சி மலை, முள்ளி மலைகளால் சூழப்பட்டு கடனா நதிக்கரையில் அமைந்துள்ள அழகிய ஊர்தான் "சிவசைலம்"



மண்ணை முத்தமிட்டபடி மாங்காய் காய்த்திருக்கும் மாமர தோப்புக்கள்.. எவ்வளவு அழுத்தமாக நின்றாலும் நம்மை தூக்கி செல்லும் சூறைக்காற்று.. அத்திரி மலையில் தோன்றி சிவசைலம் வரும் கடனா நதி..

பல மூலிகைகள் தன்னுள்ளே அடக்கி, அடித்து வரும் கடனா நதியில் நீராடினால் பல நோய்களும் விடை பெற்று சென்று விடும் . இவ்வளவு சிறப்பு வாய்ந்த ஊரில் தேவார வைப்புத்தலமாக அமைய பெற்றதுதான் பரமகல்யாணி அம்மை உடனுறை சிவசைலநாதர் திருக்கோவில். அந்த ஊரின் பூர்விகவாசிகள் அனைவரின் வீட்டிலும் சிவசைலபதியோ பரமகல்யாணியோ பெயர் கொண்டிருப்பார்கள்.

நான் நேசித்த அந்த ஊரின் நினைவிற்கே இப்பெயர் உனக்கு என கூறிய தந்தையிடம், என்னையும் ஒருமுறை அழைத்து செல்வீர்களா என ஆசை பொங்க கேட்ட தன் மகளை பார்த்த தந்தை நிச்சயமாக எனக் கூறியதோடு நில்லாமல் அழைத்தும் சென்றுவிட்டார்.

தந்தை சொன்ன வார்த்தைகளில் ஒன்று கூட இம்மியும் பிசகவில்லை என நினைத்தபடி மாசில்லா சுற்று சூழலையும்.. ஆளைதள்ளும் "ஊ" என்ற பெரும் இரைச்சலுடன் வீசும் காற்றையும்... மரத்தில் விளைந்ததா அல்லது தரையில் விளைந்ததா என வியக்கவைக்கும் மண்ணோடு முத்தமிட்ட மாங்காய்களையும்.. கடனை நதியின் சலசலப்பும்.. இமை மூட முடியவில்லை அச்சிறுமியால்.. இயற்கையின் விருந்தில் திளைத்தபடியே கோவிலுக்குள் சென்றாள்.

கோவிலுக்குள் சென்ற அந்த சிறுமி, சைலப்பனையும் அம்மை பரமகல்யாணியையும் தரிசித்து கோவிலின் பிரகாரம் சுற்றி வருகையில் கோவிலின் தல வரலாற்றை வாசிக்க அழைத்துச் சென்றார், அவள் தந்தை.

தல வரலாறு
இப்பகுதியை ஆண்ட மன்னர் சுதர்சன பாண்டியன் தினமும் சுவாமி தரிசனத்திற்கு வருவார். ஒரு நாள் அவர் வர தாமதம் ஆனதால் இனி எங்கே பூஜாரி தன்னிடம் வைத்திருந்த மாலையை, கோயிலில் தங்கியிருந்த இறை அடியார் பெண்ணிடம் கொடுத்தார்?. அவள் பக்தியுடன் அந்த மாலையை தலையில் சூடிக்கொண்டாள். அடுத்த சில நிமிடங்களில் மன்னர் வந்து விட்டார். பூஜாரிக்கு உதறல் எடுத்தது. மன்னர் வருவதற்கு முன்பாக அப்பெண்ணிடம் மாலையை வாங்கி, மன்னர் வந்ததும் அவருக்கு மாலையை பவ்யமாக அணிவித்தார். அதில் ஒருதலைமுடி நீளமாக இருந்தது மன்னர் கண்களில் பட்டுவிட்டது.

என்னையா.. முடியெல்லாம் இருக்கிறது என்ற மன்னர் பூஜாரியை ஏறிட்டு பார்த்தார். சுவாமிக்கு நீண்ட சடைகள் இருப்பதால் அந்த முடி இருக்கக் கூடும், என சிவன் மீது பாரத்தை போட்டு சொல்லிவைத்தார் பூஜாரி. மன்னருக்கு கோபம் வந்து விட்டது. இத்தனை நாள் நானும் வருகிறேன். ஒரு முறை கூட சிவனின் சடையை பார்த்ததில்லையே. எங்கே காட்டு, என்றார்.

மன்னர் சிவனின் சடையை பார்ப்பதற்காக கர்ப்ப கிரகத்தின் மற்ற மூன்று புற சுவர்களிலும் துளையிடப்பட்டன. நீண்ட நாளாக தனக்கு சேவை செய்யும் பயந்த சுபாவம் கொண்ட பூஜாரியை காப்பாற்றுவதற்காக சடையுடன் காட்சியளித்தார் சிவன். மன்னர் ஆச்சரியப்பட்டார். இதனால்தான் சிவன் சடையப்பர் என அழைக்கப்படுகிறார். இன்றைக்கும் அந்த துவாரங்கள் வழியாக சிவனின் சடைமுடியினை நாம் அனைவரும் தரிசிக்கலாம்.

சொர்கமாய் தோன்றிய, அருகில் உள்ள அவ்வை ஆசிரமம் மற்றும் அத்திரி மலை, அனைத்தையும் ரசித்தபடி ஏக்கபெருமூச்சுடன்.... வருடந்தோறும் கோடை விடுமுறைக்கு இங்கு வரலாம் என்ற உத்திரவாதத்துடன், கனத்த இதயத்துடன் சென்னையை நோக்கி....!

இரிச்மண்ட் மக்களுக்கும் தான் அறிந்த, ரசித்த அருமை பல நிறைந்த இயற்கை அன்னையின் அழகிய சிவசைலத்தை அறிமுகப்படுத்திய மகிழ்ச்சியில்..

**-பரம கல்யாணி சங்கரன்**

# சிந்தனையைத் தூண்டும் சில வைரவரிகள்

(நொளம்பூர் கண்ணன்)

1. முடியாது என்று முடங்கிவிட்டால் வேதனை.
முடியும் என்று எழுந்து விட்டால் சாதனை.

2. விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் உறங்குவதில்லை.

3. காத்திரு - கவலைப்படாதே - நடக்கவிருப்பது
சரியான நேரத்தில் சரியான இடத்தில் சரியான
காரணத்துடன் நடக்கும்.

4. உதிக்கும் போதும் மறையும் போதும் ரசிக்கும் உலகம்
உச்சிக்கு வந்தால் திட்டித் தீர்க்கும் - சூரியனை
மட்டுமல்ல. மனிதனின் வளர்ச்சியைக் கண்டும்தான்.

5. முட்டாளுடன் ஒருநாளும் விவாதம் செய்யாதீர்கள்.
ஏனெனில் வெளியே நின்று பார்ப்பவர்களுக்கு
உங்களில் யார் உண்மையான முட்டாள் என்று
தெரியாமல் போய்விடும்.

6. கோபத்தில் எது கிடைத்தாலும் வீசி எறிய எல்லோராலும்
முடியும். ஆனால் அந்தக் கோபத்தையே வீசி எறிய
ஒரு சிலரால் தான் முடியும்.

7. உன்னுடைய தவறுகள் என்னென்ன என்று நீ
உணராத வரையில் நீ மற்றவர்களையே குறை
சொல்லிக் கொண்டிருப்பாய்.

கண்ணன்
(F/o. வெங்கடேஸ்வரன்)

# திருவாரூர்

உழவும் தொழிலும் திருவாரூரின் சிறப்புகள்.
ஆலயங்கள் நிறைந்த ஆன்மீக மண்ணில் அன்பின் வழி நின்று வாழும் மக்களும் ஆன்மீக தலங்களும் திருவாரூர் மண்ணை காலத்தை போற்றும் நகராக உயர்த்துகிறது என்பது மறுக்க முடியாத உண்மை...
உழைக்கும் மக்கள் நகராக, உழவர் குடிக்கு புகழாக வாழும் திருவாரூரை போற்றுவோம்!

## முன்னுரை:

## வரலாறு

திருவாரூர் சோழ சாம்ராஜ்யத்தின் ஐந்து பாரம்பிய தலைநகரங்களில் ஒன்றாக இருந்துள்ளது. தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என அனைவராலும் அறியப்படுகிறது. இப்பெயர் ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்தினைக் குறிப்பதாகும். காவிரி முதலாம் குலோத்துங்க சோழர் காலத்தில் திருவாரூர் தலைநகராமாகவும், சைவ வளர்ச்சி மையமாகவும் திகழ்ந்ததாக இக்கோயில் கல்வெட்டுகளின் மூலம் அறியலாம்.



# தொன்மையும் தோற்றமும்:

திருவாரூர் மாவட்ட வரலாறு சங்ககாலம், களப்பிரர்காலம்; பல்லவர்காலம், சோழப்பெருவேந்தர்காலம், பிற்காலப்பாண்டியர் காலம், விசயநகரவேந்தர்காலம், தஞ்சை நாயக்கர்காலம், மராட்டியர் காலம், என்று பல்வேறு காலகட்டங்களைக் கொண்டுள்ளது. இக் கால கட்டங்களில் அரசியல், சமுதாயம், கலை, சமயம், பொருளா தாரம் ஆகிய துறைகளில் பல்வேறு வளர்ச்சிகளைக் கண்டுள்ளது. பல்வேறு சமூகப்பண்பாட்டுத் தொடர்புகள் இம்மாவட்டத்தில் நுழைந்து பல புதியபோக்குகளைத் தோற்றுவித்துள்ளதை இதன் காலவரலாறு காட்டுகிறது. இவற்றை அறிந்து கொள்ளும் சான்று களாக இலக்கியங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச் சுவடிகள், கட்டடங்கள், சிற்பங்கள், தொல்பொருள்கள், வெளி நாட்டார் குறிப்புகள் ஆகியவை விளங்குகின்றன.



சோழர்களின் ஐந்து பாரம்பரிய தலைநகரங்களுள் ஒன்றாகும். (ஆரூர், ஆவூர், குடவாயில், வல்லம், உறந்தை)
திருவாரூரை ஆண்ட மனுநீதி சோழன், பசுவிற்கு நீதி வழங்க தன் சொந்த மகனையே தேரை ஏற்றி கொன்றது வரலாற்றில் நீதிக்கு சிறந்த எடுத்துக்காட்டாக அறியப்படுகிறது. இந்த நிகழ்வை சோழர்கள் கல்தேராக வடித்தனர்.



## ஆன்மீக தலம்:

# சமயம்

### சைவசமயம்

சோழநாட்டில் சைவசமயம் பல்லவர், சோழர் காலங்களில் மிகுந்த வளர்ச்சி கண்டுள்ளது. இம்மாவட்டத்தில் நாயன்மார்களால் தோற்றுவிக்கப்பட்ட பக்தி இயக்கத்தின் காரணமாக ஏராளமான சிவன்கோயில்கள் தோன்றியுள்ளன. கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முன்பாக களப்பிரர் காலத்திற்குப் பின்னர் சோழநாட்டில் ஆட்சிபுரிந்த கோச்செங்கணான் என்ற மன்னன் எழுபது சிவன் கோயில்களை எடுத்தான். நன்னிலம், அம்பர் மாகாளம், திருக்கொண்டீச்சுரம் (நன்னிலம் வட்டம்) இடும்பாவனம் (திருத்துறைப்பூண்டி வட்டம்) முதலிய இடங்களில் உள்ள சிவன் கோயில்களை, இவன் திருப்பணி செய்து கட்டியுள்ளான். இதனை சம்பந்தர், அப்பர் ஆகியோர் தமது பதிகங்களில் குறிப்பிட்டுப் பாடியுள்ளனர்.

### வைணவம்

சைவசமயத்திற்கு அடுத்த நிலையில் வைணவம் இம் மாவட்டத்தில் வளர்ச்சிபெற்று விளங்கியது. பல்லவர் காலத்தில் வாழ்ந்த திருமங்கையாழ்வார் இம்மாவட்டப் பகுதிகளுக்கு வந்து வைணவ பக்தியியக்கம் வளர பாடுபட்டுள்ளார். இவரால் பாடப் பட்ட தலங்கள் சில இங்கு உள்ளன. இவற்றில் குறிப்பிடத் தக்கவை குடவாசல் வட்டத்திலுள்ள திருக்கண்ணமங்கை, நன்னிலம் வட்டத்திலுள்ள சிறுபுலியூர் ஆகும். இவை இவரால் மங்களா சாசனம் பெற்ற பதிகளாகும். திருகண்ணமங்கையிலுள்ள பெருமாள்கோயில் இன்றும் சிறப்புடன் விளங்கி வருகிறது. நாதமுனிகளின் உடன்பிறந்த சகோதரி இவ்வூரில் வாழ்க்கைப் பட்டவர். ''இராமானுசக்கூடம்'' என்ற பெயரில் இவ்வூரில் கி.பி. 1553-ல் அன்னதானச் சத்திரம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருவரங்கத்து அமுதனார், பிள்ளைப்பெருமாள் அய்யங்கார், அந்தகக் கவி வீரராகவ முதலியார், காளமேகப்புலவர் பாடல்களில் இத்திருத்தலம் இடம் பெற்றுள்ளது. சிறுபுலியூர் பெருமாள் பற்றி திருமங்கையாழ்வார் பத்துப் பாடல்கள் பாடிப் போற்றியுள்ளார்.

## ஊரும் தேரும்:

**ஆழித்தேர்** தமிழகத்திலுள்ள திருவாரூர் தியாகராஜர் கோயிலுக்குரிய தேராகும். மிகவும் பெரியதாகவும் அழகாகவும் இருப்பதால் அதனைக் கொண்டு "திருவாரூர் தேரழகு" என்ற சிறப்பைப் பெற்றது. ஆசியாவிலேயே இரண்டாவது உயரம் கொண்ட தேர் ஆகும்.[1][2]

ஆழித்தேர் எனப்படும் திருவாரூர் தேர், சுமார் 96 அடி உயரம் கொண்டது. 360 டன் எடை கொண்டது. நான்கு நிலைகள் கொண்டு 6 மீட்டர், 1.2 மீட்டர், 1.6 மீட்டர், 1.6 மீட்டர் என பிரமாண்டமாக இருக்கும் தேர், ஆடி அசைந்து வரும் அழகைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம்.

## வேளாண்மை சிறப்பு:

திருவாரூர் மாவட்டத்தில் வேளாண்மைத் தொழில் முதன்மைத் தொழிலாக உள்ளது. 70 விழுக்காட்டிற்கும் மேற்பட்டவர்கள் விவசாயத்தையே நம்பி உள்ளனர். இம்மாவட்டத்தின் முதன்மைச் சாகுபடிப் பயிர் நெற்பயிராகும். தமிழ்நாட்டின் நெற்களஞ்சியத்தை நிரப்புவதில் இம்மாவட்டம் முக்கியப்பங்கு வகிக்கிறது. தலைக்காவிரி மற்றும் அதன் கிளைநதிகள் பாசனத்திற்கு அளிக்கும் வண்டல் மண் வளத்தால் வேளாண்மையில் முக்கிய இடத்தை பெறுகிறது.

இம்மாவட்டம், நெல் வயல் வெளிகளினாலும், உயர்ந்த தென்னைமரங்களினாலும், பசுமையான தாவரங்களினாலும் செழிப்புடன் திகழ்கிறது. தலைக்காவிரி என அழைக்கப்படும் காவிரி நதி மற்றும் அதன் கிளை நதிகள் நிலத்தினை வளப்படுத்துகின்றன.

## முடிவுரை

திருவாரூர், நன்னிலம், குடவாசல், நீடமங்கலம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி வட்டங்களையும் இணைத்து 01.01.1997 அன்று திருவாரூர் மாவட்டம் உருவாக்கப்பட்டது.

திருவாரூர் மாவட்டத்தில் 2 வருவாய் கோட்டங்கள், 8 வட்டங்கள், 573 ஊர்கள், 10 ஒன்றியங்கள், 4 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள்கள் உள்ளன

**-கார்த்திகேயன் சௌந்தரராஜன்**

2

# விடுகதைகள் - விடை கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்

(நொளம்பூர் கண்ணன்)

விடுகதைகள் என்பது நம் தமிழ்நாட்டுப் பாரம்பரியத்தில் வழி வழியாய் வந்த அறிவுப் புதிர் விளையாட்டு. குழந்தைகளே! ரெடியா! கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

1. பல் துலக்காதவனுக்கு உடம்பெல்லாம் பற்கள். அவன் யார்?
2. தலையைச் சீவினால் நம் தாகம் தணிப்பான். அவன் யார்?
3. ஊரெல்லாம் ஒரே விளக்கு. அதற்கு மாதத்திற்கு ஒருநாள் மட்டும் ஓய்வு. அது என்ன?
4. நாலு காலுண்டு. வீச வாலில்லை. அது என்ன?
5. கடல் நீரில் பிறந்து மழை நீரில் மடிவது யார்?
6. ஆயிரம் பேர் வந்து சென்றாலும் வந்த சுவடு தெரியாது. அவன் யார்?
7. பிறந்ததும் இனிப்பாள். கலந்ததும் புளிப்பாள். கடைந்த பின் மணப்பாள். அவள் யார்?
8. முத்து வீட்டுக்குள் தட்டுப்பலகை. அது என்ன?

- விடைகள் கீழே -

———— x ————

விடைகள்: 1) சீப்பு 2) இளநீர் 3) நிலா 4) நாற்காலி 5) உப்பு 6) எறும்பு 7) பால், தயிர், வெண்ணை (நெய்) 8) நாக்கு.

# எட்டையபுரம்




எங்கள் ஊர் எட்டையபுரம் எனக்குள்ளே பரவும்  இன்ப உணர்வுகளை மறுக்கவில்லை.

எட்டயபுரம் ஒரு ஜமீன்.  ஜமீந்தார்களை உள்ளூர்வாசிகள் “மகாராஜா“ என்று தான் குறிப்பிடுவோம். அழகான அரண்மனை.  தர்பார்களும், கொலு மண்டபங்களும், அந்தப்புரங்களும் , அரண்மனைக்கு முன் பெரிய திடலும், குதிரை லாயங்களும்— சொல்லிக் கொண்டே போகலாம்.  இப்பொழுதும் அவைகள் பழங்காலச் சின்னங்களாய்ச் சிதிலமடைந்து காட்சியளிக்கின்றன.  அரண்மனையில் கொலு வைப்பார்கள். பெரிய சரஸ்வதி சிலை , முழுவதும் தங்கம்.  நவராத்திரியில் ஊருக்குக் கொண்டாட்டம்.

மகாராஜாவின் பிறந்த நாளுக்கும் இசை மேதைகளும் சினிமா நடிகர்களும் வந்திருக்கின்றார்கள்.  தியாகராஜ பாகவதர், என். எஸ். கிருஷ்னன், டி. ஏ. மதுரம் ஆகியோரும் வந்திருக்கிறார்கள்.  விளக்குகள் அலங்காரமும் நாதஸ்வரஓசையும் ஊருக்கே அழகைக் கூட்டும்.  எல்லோரும் அவரவர் வீட்டு விழாவாக எண்ணி மகிழ்வர்.  எட்டையபுரத்துக்கு "இளசை" என்றும் பெயருண்டு.  எட்டயபுரம் வரலாறு (Ettayapuram Past and Present) என்ற நூலுக்கு 1889ஆம் ஆண்டில் பிஷப் கால்டுவெல் அணிந்துரை எழுதியுள்ளார்.  இதன் ஆசிரியர் டபிள்யூ. இ. கணபதியா பிள்ளை.  தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்ட மன்னர் பரம்பரை.  தமிழில் இயல், இசை, நாடக வளர்ச்சிக்கு அதிக சேவை செய்துள்ளனர்.

பாரதியின் தந்தை சின்னச்சாமி அய்யர் அரண்மனையில் வேலை பார்த்தார்.  சங்கீத மும்மூர்த்திகளின் ஒருவரான முத்துசாமி தீக்ஷதரின் தம்பியான பாலுசாமி தீட்க்ஷிதரும் அரண்மனையில் வேலை பார்த்தார்.  சுப்பையா என்ற சுப்பிரமணியனுக்கு, தாத்தா மகாராஜா என்று அழைக்கப்பட்ட ஜமீன்  காலத்தில் "பாரதி" என்ற பட்டம் வழங்கப்பட்டது.  சங்கீதமேதை முத்துசாமி தீட்சதரைப்போல சங்கீத உலகின் இன்னொரு மாமேதை உண்டு.   சுப்பராம தீட்சதர் சமஸ்தானத்தின் தலைமை வித்வானாக இருந்தார்.
ஊரில் இருக்கும் உயர்நிலைப் பள்ளி, ராஜாவால் நடத்தப்பட்டு வருகின்றது .  சுதந்திர தாகத்தை நினைவூட்டும் பெயரில் "பாரத மாதா" என்ற பெயர் கொண்ட மிகப்பெரிய திரையரங்கம் அரண்மனைக்குச் சொந்தமானது.  எம்.கே. தியாகராஜ பாகவதர் இந்த அரங்கில் பாட்டு நிகழ்ச்சி நடத்தியுள்ளார் "ஜெஜ்ஜை" என்ற அரண்மனையும், கண்ணாடி மாளிகையையும், பாரதி மணிமண்டபமும் வங்கதேசப் பொறியாளர் “சித்தாலே “என்பவரால் வடிவமைக்கப்பட்டவை.
ஊருக்கு முக்கியமானவர்கள் வந்தால் அரண்மனை விருந்தினர் இல்லத்தில் தங்க வைத்து உபசரிக்கும் பழக்கம் இருந்து வந்தது.  விருந்தோம்புதலில் பேரரசுகள் மட்டுமல்ல, சின்ன ஜமீன்களும் குறைந்தது அல்ல.



1934-ஆம் ஆண்டு அண்ணல் மகாத்மா காந்தியவர்கள் தமிழகம் வந்தார்.அப்பொழுது அவர் மதுரை, எட்டையாபுரம் ஆகிய இடங்களுக்கும் வருகை புரிந்தார். மதுரைக்கு வந்த பொழுது என் தந்தையார் ஊர்வலத்திற்குச் சென்று பார்த்திருக்கின்றார்கள். பாரதி உயிருடன் இருக்கும் பொழுது அவர் பெருமையை, அவரின் சக்தியைப் பெரும்பாலோர் புரிந்து கொள்ளவில்லை. அவர் பிறந்த மண்ணில், அரண்மனையில் பெரியவர்களால் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டவர். எட்டையபுரம் சமஸ்தானம் கலைஞர்களுக்கு ஒரு தொட்டில். பாரதி பட்டமே கிடைத்தது அங்கேதான்.

ஒரு செவிவழிச் செய்தி, பக்கத்தில் இருக்கும் கோயில் வெளியில் திண்ணையில் உட்கார்ந்து திடீரெனப் பாடுவாராம். ஒரு முறை தெருவில் நடந்து கொண்டிருந்தவர் அவரிடம் , " உனக்குப் பாட வேறு இடம் கிடைக்க வில்லையா?" என்று கேட்கவும் உடனே பாரதி எழுந்து "தெருவில் உட்கார்ந்து பாடட்டுமா?" என்று பதில் கொடுத்தாராம்.

இளசை என்ற பெயர் ஊரின் எழிலுக்காக வந்த பெயர்.

எல்லோருடைய வாழ்க்கையிலும் பள்ளி வாழ்க்கை மறக்க முடியாது. என்னை உருவாக்கிய பள்ளியும் சாதாரணமானதல்ல. பாரதியும், ஸ்வாமி சிவானந்தரும் படித்த பள்ளி. பல பேச்சாளர்களையும், எழுத்தாளர்களையும், சமுதாயப் பணியாளர்களையும் உருவாக்கிய பள்ளி. "ராஜா உயர் நிலைப்பள்ளி"எங்கள் ஊருக்கு கல்கி வந்தார் என்பது மிகவும் பெருமை. கல்கி அவர்கள் பத்திரிகை மூலம் பணம் வசூலித்துக் பாரதிக்கு நினைவு மண்டபம் கட்டப்பட்டது. போதும், போதும் என்று கூறி வசூலை நிறுத்தும் அளவில் மக்களின் பங்களிப்பு இருந்தது. சுதந்திரம் கிடைக்கும் முன் ஆரம்பித்த திட்டம். சுதந்திரம் கிடைத்த அதே ஆண்டில் பாரதியின் மணிமண்டபம் திறக்கப்பட்டது. பாரதியின் சிறப்பும் உள்ளூரின் ஒத்துழைப்பும் மண்டபம் எழும்பக் காரணங்களானாலும், கல்கியும், கல்கி பத்திரிகையும் பெருமை படுத்தப்படவேண்டும். ஒரு சமயம் சுணக்கம் ஏற்படுவதுபோல் தோன்றும் பொழுதே உடனே ஊக்கம் கொடுத்து வழிநடத்திய மதிப்பிற்குரிய இராஜாஜி அவர்கள் மூலகர்த்தா. பாரதியின் உடல் இடுகாட்டுக்குப் போகும் பொழுது வழியனுப்பப்பட்ட விதத்திற்குத் தமிழ் மக்கள் அவனுக்கு மண்டபம் எழுப்பி அஞ்சலி செலுத்திப் பரிகாரம் செய்து விட்டனர். அரசு, எழுத்துலகப் பிரம்மாக்கள், கலையுலகப் பெரியவர்கள், சிந்தனையாளர்கள் ஒருவர் மாறி ஒருவர் தொடர்ந்து வருடந்தோறும் விழா நடத்திவருகின்றனர்.

பாரதியால் பலரும் அறிந்துகொண்ட ஊர்; வெளியில் அதிக விளம்பரமில்லாத பல செய்திகளைக் காணலாம்:

- சீறாப்புராணம் பாடிய இஸ்லாமியக் கவிஞர் உமறுப் புலவர் வாழ்ந்த ஊர்.

- எட்டயபுரத்தில் தோன்றிய எஸ்.ஏ.அய்யர் இந்திய தேசிய இராணுவத்தில் மிகத் தீவிரமாக ஈடுபட்டதுடன் நேருஜி பற்றி ஆங்கிலத்தில் நூல் இயற்றியுள்ளார்.

எங்கள் ஊர் நடிகர்களை விட முடியுமா? ஈ.ஆர். சகாதேவன், டி.வி. நாராயணசாமி, பி.எஸ் வெங்கடாசலம் திரையுலகில் இவர்களைப் பார்த்திருக்கலாம்.

ராஜா உயர்நிலைப் பள்ளி நூறு ஆண்டுகளைக் கடந்து மேலும் சில ஆண்டுகளாகி விட்டன. பாரதி மட்டுமல்லர், ஸ்வாமி சிவானந்தா என்ற குப்புசாமியும் இப்பள்ளியில் படித்தவர்தான். மதுரை அரவிந்த் கண் மருத்துவ மனையின் நிறுவனர் டாக்டர் வெங்கடசாமியும் இங்கு படித்தவர். நானும் இங்கே படித்தவன்.


இந்த ஊரில் வாழ்ந்த இன்னும் சிலரைப் பற்றிக் கூறவேண்டும். நாகூர் முத்துப் புலவர், கடிகை முத்துப்புலவர், கீரை மஸ்தான் புலவர் ஆகியோர் வாழ்ந்த பூமி.

எட்டயபுரம் ஆஸ்தானத்திற்கு நிறைய சங்கீத வித்வான்கள் உண்டு. ஆனால் அங்கேயே தங்கியிருந்தவர்களில் முக்கியமானவர் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதரின் தம்பியான பாலுசாமி தீக்ஷிதர். தம்பி வாழ்ந்த இடத்திற்கு அண்ணனும் வந்தார், வாழ்ந்தார், மறைந்தார். முத்துசாமி தீக்ஷிதருக்கும் நினைவு மண்டபம் இருக்கின்றது. பாரதியின் நினைவு மண்டபத்திற்குக் கொஞ்ச தூரத்திலேயே இதுவும் அமைந்துள்ளது. உமறுப் புலவருக்கு 1912ஆம் ஆண்டில் பிச்சைக்கோனார் என்பவர் நினைவுச் சின்னம் எழுப்பியுள்ளார்.

முற்போக்கு வாலிபர் சங்கம் ஒன்று பல வருடங்களாக இயங்கி வருகின்றது. வருடந்தோறும் பாரதி விழா டிசம்பர் மாதம் நடத்தி வருகின்றனர். அருமையான நூலகம் வைத்துள்ளனர். பாரதி ஆய்வாளர் அமரர் தொ.மு. ரகுநாதன் தனது ஐந்து லட்ச ரூபாய் மதிப்புள்ள நூல்களை அன்பளிப்பாக வழங்கி பாரதி ஆய்வு மையம் அமைத்துக் கொடுத்திருக்கின்றார்.

இந்தியா சுதந்திரம் பெறும் முன்னர் வந்த பெரியவர்களில் இருவரின் பெயர்களைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. 1934 ஜனவரி மாதம் மகாத்மா காந்தி வந்தார். 1935-ல் வ.உ. சிதம்பரனார் வந்தார்.

புலவர்களை எல்லாம் நாவலர் சோமசுந்தர பாரதியார் தான் எட்டயபுரத்துக்கு அழைத்து வந்தார். நாவலரும், நாகூர்முத்துப் புலவர் எட்டயபுரத்தில் புலவர்களாக திகழ்ந்தார்கள். சோம-சுந்தர பாரதியார் எட்டயபுரத்தில் 1935ம் ஆண்டு தனது வீட்டைக்கட்டி அதற்கு “தமிழகம்” எனப்பெயரிட்டு அழைத்தார். இந்தப்புதுமனை புகுவிழாவிற்கு சிதம்பரனாரை நாவலரை அழைத்து இருந்தார். சுதேசிய கப்பல் கம்பெனியில் ஆட்சி பொறுப்பாளராக சில காலம் நாவலர் இருந்தார்.
இந்த ஜமீன்தாருக்கு தேசிய இயக்கத்தில் பங்கு கொண்ட பெரும் தலைவர்களான ராஜாஜி, கிருஷ்ணபாரதி, வைத்தியநாத அய்யர், கல்கி ஆகியோருடன் நெருங்கிய நட்பு உண்டு. இந்த நட்பின் காரணமாக 1945&ஆம் ஆண்டு எட்டயபுரத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலய பிரவேசம் நடைபெற்றது. ராஜாஜி தலைமையில் நடந்த இந்த ஆலய பிரவேசத்தில் மா.பொ.சிவஞான கிராமணியார், வைத்தியநாத அய்யர், கிருஷ்ணசாமி பாரதி மற்றும் தமிழகத்தின் சிறந்த தேசபக்தர்கள் கலந்து கொண்டார்கள். ஜமீன்தார் குடும்ப ஆசிரியரும், சிறந்த தேசபக்தருமான கட்டாலங்குளம் சிவத்தசாமி ஆலய பிரவேசம் நடைபெற ஜமீன்தாருக்கு உறுதுணையாக இருந்தார்



1945 ஜூன் மாதம் பாரதி மணிமண்டபத்திற்கு அடிக்கல் நாட்டு விழா ஜமீன்தார் தலைமையில் நடைபெற்றது. ராஜாஜி அடிக்கல் நாட்டினார். இவ்விழாவிற்கு மகாத்மா காந்தி, சரோஜினி நாயுடு, போன்றோர் வாழ்த்துரை அனுப்பினார்கள். பாரதி மண்டபம் நிறுவ ஜமீன்தார் நிலமளித்து அன்பளிப்பு வழங்கினார். இச்சமயத்தில் திரு.டி.கே. சண்முகம் குழுவினர் நடத்திய ஔவையார் நாடகத்தின் ஒரு நாள் வசூல் ரூ1140 அடிக்கல் நாட்டு விழாவிற்கு செலவிற்கு நிதியாக வழங்கப்பட்டது.
எட்டயபுரம் சுதந்திர போராட்டம் குறித்து மிக அதிகமான விழிப்புணர்வு இல்லாததும், மிக பிரமாண்டமான அரண்மனையை மக்களுக்கு காட்டாமல் இருப்பது வேதனையான விஷயம்தான்.

அன்புடன்,
முத்துராஜ்.

# மூளைக்கு வேலை கொடுப்போமா!

(நொளம்பூர் கண்ணன்)

ஒரு மூன்று இலக்க எண்ணை எழுதிக் கொள்ளுங்கள்.
அதனைத் தொடர்ந்து அதே எண்ணை மீண்டும் எழுதி ஆறு
இலக்க எண்ணாக ஆக்குங்கள்.

அதை ஏழு கொண்டு வகுங்கள்.
வந்த விடையை பதினொன்றால் வகுங்கள்.
கிடைத்த எண்ணை பதிமூன்றால் வகுங்கள்.
இப்போது கிடைத்த விடை - என்ன ஆச்சரியம் - நீங்கள்
முதலில் நினைத்த எண் - சரிதானா !!!

பதில் - விளக்கம் -

மூன்று இலக்க எண் - 369
மீண்டும் எழுதினால் - 369369
ஏழு கொண்டு வகுத்தால் - 52767
பதினொன்றால் வகுத்தால் - 4797
பதிமூன்றால் வகுத்தால் - 369

மீண்டும் சந்திப்போம் -



# வட சென்னை: என் பார்வையில்!

என் பெயர் சிவசக்தி. நானும் என் கணவரும் ரிச்மண்ட்-ல் 3 வருடங்களாக வசித்து வருகிறோம் ,என் தந்தை இந்தியாவில் மத்திய அரசில் பணியாற்றியவர். அதனால் நாங்கள் தமிழகம் முழுவதும் பார்த்து விட்டோம். பெரும்பாலாக தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தை சுற்றி தான் எங்கள் வாழ்க்கை. கடைசியாக வந்து சேர்ந்தது திருவொற்றியூர்.

தமிழ் படங்களில் வடசென்னை பற்றிய காட்சிகளை பார்த்து இருப்பீர்கள். இப்போது
வடசென்னை பற்றி நீங்கள் அறியாத பல சுவாரசியமான விஷயங்கள் சொல்கிறேன், கேளுங்கள்.

“காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே” என்றுணர்ந்த பட்டினத்தாருக்கு பேய் கரும்பு இனித்தது இங்கே தான், அவர் ஜீவசமாதி இருக்கும் இடமும் இதுதான்.

மராட்டிய மன்னன் வீரசிவாஜிக்கு வாழ்வளித்த காளிகாம்பாள் கோயில் உள்ளது வடசென்னையில்.

மண் எல்லாம் சிவலிங்கம் என்று போற்றப்படும் புண்ணிய பூமியான இங்கு தான் ராமலிங்க அடிகளார் என்று போற்றப்படும் வள்ளல் பெருமான் வசித்து வந்தார்.

நால்வருள் ஒருவரான சுந்தரருக்குச் சிவபெருமான் மணம் செய்து வைத்த வடிவுடையம்மன் கோவில் உள்ளது வடசென்னையில் தான்.

குனங்குடி மஸ்தான் எனும் இஸ்லாமிய சித்தரின் ஜீவசமாதி உள்ளது இங்கு தான். அவர் தொண்டியில் இருந்து வந்ததால் தொண்டையார்பேட்டை என்று அழைக்கப்பட்ட இடம் தான் தற்போதைய தண்டயார்பேட்டை.




மீன் உணவை விரும்பி உண்ணும் அசைவ பிரியர்களின் சொர்க்க பூமியாக திகழும் காசிமேடு மீன் சந்தை இருப்பதும் வடசென்னையில் தான். அதோ, பீஜோ, மொயின்ஹா மற்றும் கோவ்சே போன்ற அசல் மற்றும் உண்மையான பர்மிய உணவுகளுக்கும் வடசென்னை பிரபலமானது.

சவுகார்பேட்டை, மின்ட் தெரு, காசிமேடு மற்றும் வண்ணாரப்பேட்டை ஆகிய இடங்களில் பொருட்களை மொத்தமாக மலிவான விலையில் வாங்கலாம்.

இந்திய கப்பல் வர்த்தகத்தில் முக்கிய பங்கு வகிக்கும் சென்னை துறைமுகம் இருப்பதும் வடசென்னையில் தான்.

தமிழகத்தின் முக்கிய தொழிற்சாலைகள், அனல் மின் நிலையம், அழகிய கடற்கரைகள் எல்லாம் இருப்பதும் வட சென்னையில் தான்.

சிங்கார சென்னைக்கு அழகு சேர்ப்பது வடசென்னை மக்களின் அழகு தமிழான “மட்ராஷ்-பாஷய்” தான். கேட்பதற்கு அழகாக இருக்கும். சென்னையின் பலங்குடி மக்கலான மீனவர்கள் வசிப்பதும் இந்த வட சென்னையில் தான்.

சுருக்கமாகச் சொல்வதானால், வட சென்னை பல்வேறு உணவு வகைகள், அழகான கடற்கரைகள் மற்றும் இயற்கை துறைமுகங்கள் கொண்ட சமூக மற்றும் கலாச்சார ஒருங்கிணைப்பின் சிறந்த இடமாகும்.

நீங்கள் கேட்காமலே உதவி செய்யும் மனிதர்களையும் பார்ப்பீர்கள்.

சிவசக்தி அறிவுக்கண்ணன்

# கன்னியாகுமரி



கன்னியாகுமரி என்றதும் உங்களுக்குத் தோன்றுவது என்ன ? இந்தியாவின் தென் எல்லை, முக்கடல் சந்திக்கும் இடம், சூரியன் எழுவதையும் மறைவதையும் ஒரே இடத்திலிருந்து பார்க்கமுடியும் இடம், திருவள்ளுவர் சிலை, விவேகானந்தர் பாறை ?

இது போன்ற பல சிறப்புகளையும் கொண்டு, குமரி அம்மன் பெயரை தாங்கியுள்ள கன்னியாகுமரி நகரம், தமிழ் நாட்டின் தென் கோடியில் இருக்கும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளது. ஒரு புறம் கேரள மாநிலத்தையும், இன்னொரு புறம் திருநெல்வேலி மாவட்டத்தையும், மறு புறங்களில் இந்திய பெருங்கடலையும் எல்லைகளாகக் கொண்டு, நாரோயிலை (நாகர்கோவிலின் செல்லப்பெயர்) தலை நகராகக்  கொண்ட ஒரு சிறிய மாவட்டம் தான் கன்னியாகுமாரி. மேற்குத்தொடர்ச்சி மலை இம்மாவட்டத்தில் ஆரம்பித்து வடக்கே குஜராத் மாநிலம் வரை தொடர்கிறது.

அழகான கடற்கரைகளையும், வயல்வெளிகளையும், தென்னந்தோப்புகளையும் மற்றும் காடுகளையும் கொண்ட இம்மாவட்டம் கல்வியறிவில் தமிழ் நாட்டிலே முதல் மாவட்டமாக திகழ்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தை “குமரி” மாவட்டம் என்று சுருக்கமாகவும், “நாஞ்சில் நாடு” என்ற பெயரிலும் அழைப்பதைக் காணலாம். உங்களுக்கு ஒரு கேள்வி: “குமரியார்” என்றும், “நாஞ்சிலார்” என்றும் அழைக்கப்பட்ட அரசியல் தலைவர்கள் யார், யார் ?

குமரி மாவட்டத்தின் பொருளாதாரம் மீன்பிடித்தல், விவசாயம் மற்றும் சுற்றுலா ஆகிய தொழில்களைச் சார்ந்தே உள்ளது. திருநெல்வேலி-கன்னியாகுமரி மாவட்டங்களின் எல்லை அருகே அமைந்துள்ள முப்பந்தல் காற்றாலைத் தோட்டமானது இந்தியாவிலே பெரியவைகளில் ஒன்று.

இன்றைய கன்னியாகுமரி மாவட்டம் அமைந்திருக்கும் இடம், 1956 ஆம் ஆண்டு வரை கேரள மாநிலத்தின் (அன்றைய திருவிதாங்கூர்) ஒரு பகுதியாக இருந்ததாலும், இலங்கை மக்களுடன் அப்பகுதி மக்கள் வைத்திருந்த உறவுகளின் விளைவாகவும், கன்னியாகுமரி மக்களின் பேச்சில் சற்றே மலையாளமும், சிறிது இலங்கைத் தமிழும் கலந்திருப்பதை இன்றும் காணலாம். அவர்களின் உணவுப்பழக்கத்திலும், கேரள மற்றும் இலங்கையின் தாக்கத்தை இன்றளவிலும் காணலாம். கடல்சார் உணவுகள், வாழைப்பழ சிப்ஸ், வாழைப்பழ பஜ்ஜி மற்றும் பெரிய அரிசி சாதம் ஆகியவற்றை இப்பகுதி மக்களின் விருப்ப உணவுகள் எனலாம்.

"ஏலே", "மக்ளே" என்று நண்பர்களையும், உறவுகளையும் அன்பொழுக அழைப்பவர்கள், கோபம் வந்தால் "ஒரே சமுட்டாக சமுட்டிப்புடுவார்கள்" (சமுட்டு = உதை).



தமிழ் நாடு காவல்துறையின் தலைமை இயக்குனர் திரு. சைலேந்திர பாபு, இந்திய விண்வெளி ஆய்வு மைய முன்னாள் மேலாளர் திரு. சிவன், தெலுங்கானா மற்றும் புதுவையின் ஆளுநர் திருமதி. தமிழிசை சௌந்தரராஜன், மற்றும் எழுத்தாளர் திரு. ஜெய மோகன் ஆகியோர் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற ஆளுமைகளில் ஒரு சிலர்.
உங்களுக்கான கேள்வி: பல்லாண்டுகளுக்கு முன் மாவட்ட அரசுப் பேருந்து கழகங்கள் தலைவர்களின் பெயரால் அழைக்கப்பட்டபோது (உதாரணமாக, திருநெல்வேலி மாவட்டத்தின் "கட்டபொம்மன் பேருந்து கழகம்"), கன்னியாகுமரி மாவட்ட பேருந்து கழகம் எவ்வாறு அழைக்கப்பட்டது ?

குமரி மக்களுக்கு நெடிய போராட்ட வரலாறு உள்ளது. மேலாடை அணியும் உரிமை மறுக்கப்பட்ட அந்தப் பகுதி பெண்களுக்கு, அந்த உரிமையை பெற்றுக்கொடுத்த "தோள் சீலை போராட்டம்", வழிபாட்டில் புதிய சிந்தனைகளை கொணர்ந்த "அய்யா வழி" இயக்கம், நாட்டின் சுதந்திர போராட்டம் மற்றும் தமிழ் நாட்டுடன் இணைக்கக் கோரி போராட்டம் என அவர்களின் போராட்டம் வலி நிறைந்தது, வலிமையானது.





இந்தியாவில் உங்கள் குடும்பத்துடன் கண்டு களிக்க தகுதியான பல இடங்களில் குமரி மாவட்டமும் ஒன்று. அங்கு செல்வதற்கு விமானம் மூலமாக திருவனந்தபுரம் சர்வதேச விமான நிலையம் சென்று, அங்கிருந்து பேருந்துகளில் செல்லலாம். பிற தமிழக நகரங்களில் இருந்து புகை  வண்டி மற்றும் விரைவுப் பேருந்துகள் மூலமாக கன்னியாகுமரிக்கோ அல்லது நாகர் கோவிலுக்கோ நேரடியாக செல்லலாம். அங்கு 2 முதல் 5 நாட்கள் வரை பார்த்து மகிழ பல இடங்கள் உண்டு. ஒரு 4-நாட்கள் மாதிரி பயண அட்டவணையை இங்கு காண்போம்.

நாள் 1: கன்னியாகுமரிக்கு வருகை, விவேகானந்தர் பாறை மற்றும் திருவள்ளுவர் சிலைக்கு படகு சவாரி, காந்தி மற்றும் காமராஜர் மண்டபங்கள், சூரியன் மறைவு பார்வையிடல், கடற்கரை
நாள் 2: சூரிய உதயம் பார்வையிடல், முக்கடல் சங்கமம், குமரி அம்மன் திருக்கோவில், தூய உபகார மாதா ஆலயம், வட்டக்கோட்டை
நாள் 3: சுசீந்திரம் தாணுமாலய சுவாமி திருக்கோவில், ஆரல்வாய் மொழி புனித தேவசகாயம் ஆலயம் (கிறிஸ்துவ புனிதர் பட்டம் பெற்ற முதல் தமிழர்), நாகராஜா திருக்கோவில், நாகர்கோவிலில் ஷாப்பிங்
நாள் 4: பத்மநாதபுரம் அரண்மனை("வருஷம் 16" திரைப்பட புகழ்), மாத்தூர் தொட்டிப்பாலம், திற்பரப்பு அருவி
உங்களுக்கான கேள்வி: குமரி மாவட்டத்தில் உள்ள எந்த கடற்கரை கிராமத்தில் "கடலோர கவிதைகள்" திரைப்படம் படமாக்கப்பட்டது ? தெக்குறிச்சி, முட்டம் அல்லது தேங்காய்பட்டினம் ?

உங்களை அன்போடு வரவேற்க கன்னியாகுமரி எப்போதும் காத்திருக்கிறது. நீங்கள் எப்போது வருகிறீர்கள் ?

-மார்செலின் லூவிஸ்மார்ட்டின்

# இராஜபாளையம்



உலகின் எப்பாகத்தில் எத்தனை ஆடம்பரங்களுடன்  வசித்தாலும் சொந்த ஊரில் வசிக்கும் மகிழ்ச்சியை அடைந்து விட முடியாது. சுற்றத்தார் சூழ உற்றார் உறவினருடன் சேர்ந்து வாழும் வாழ்க்கைக்கு வேறு எதனையும் ஈடாக கூறிவிட முடியாது.

மனது முழுதும் மகிழ்ச்சியுடன் கவலைகளற்று நான் வாழ்ந்த எனது சொந்த ஊரைப் பற்றி கூறப்போகிறேன்.
தாய் தந்தையுடன் ஊரை விட்டு நாட்டிற்கு இடம் பெயர்ந்திருந்தாலும் அங்கு வாழ்ந்த இனிமையான நாட்கள் என் மனதில் பசுமரத்தாணி போல் அழியாமற் பதிந்துள்ளன.  எனது சொந்த ஊர் இராஜபாளையம் மலைகளையும் மலை சார்ந்த இடங்களையும் கொண்ட இடத்தில் உள்ளது.

**நகர வரலாறு**

ஆந்திர நாட்டின் கிருஷ்ணா, கோதாவரி, விசாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் இராஜூக்கள் வாழ்ந்து வந்தனர்.  பாண்டிய நாட்டைச் சேர்ந்த சுந்தர பாண்டியன் கி.பி. 14ம் நூற்றாண்டில் ஆட்சி செய்த காலத்தில் வட நாட்டிலிருந்து வந்த முகமதிய படைகள் சிதைத்த பொழுது, விஜய நகர மன்னர் தனது தளபதிகளில் ஒருவரான கம்பண்ண உடையாரை பாண்டிய நாட்டை சீர்படுத்த அனுப்பி வைத்தார். இவருடன் ஆந்திர நாட்டின் 26 கிராமங்களில் இருந்து படை வீரர்கள் புறப்பட்டு வந்தனர்.  பாண்டிய நாட்டின் பாதுகாப்புக்கென இப்படை வீரர்கள் நிரந்தரமாக முகாமிட்டு இருந்தனர். அவர்கள் தங்கிய இடங்கள் பாளையங்கள் ஆயின. இராஜூக்கள் பாளையமாக இருந்து பின்னர் இராஜபாளையமாக உருவாகியது. கி.பி. 17ம் நூற்றாண்டில் மதுரை மன்னர் சொக்கநாதர் ஓர் இனாம் சாசனம் மூலமாக இராஜபாளையம் பழைய பாளையத்தை 'சின்னய்ய ராஜுவிற்கு தான சாசனமாக வழங்கியதாக வரலாறு கூறுகிறது.  பழங் காலத்தில் பழைய பாளையம் புதுப்பாளையம் என இரு தனித்தனி கிராமங்களாகவே விளங்கி உள்ளது. இந்த பாளையங்களுக்கு இடையே இருந்த பகுதிகள் காடுகளாகவே இருந்து வந்துள்ளன.  கால வளர்ச்சியில் தங்கள் உணவுத் தேவைகளை உற்பத்தி செய்து கொள்கிற நோக்கத்தில் இப்பாளையத்து மக்கள் பக்கம் இருந்த நிலங்களைப் பயன்படுத்தி விவசாயம் செய்தனர்.

1900 களில் சிறிய நகரமாக இருந்த இராஜபாளையம் படிப்படியாக ஒரு செழிப்பான வணிக சமூகமாக உருவானது.  வடக்கு எல்லையில் இருந்து தெற்கு எல்லை வரை 3 மைல் பரந்து விரிந்து நீளமான சங்கிலி தொடர் போல காட்சி தரும் இந்நகர மக்களின் ஆர்வத்தாலும் உழைப்பாலும் இங்கு வர்த்தகம் விரைவாக வளர்ந்தது.



**நகர சிறப்புகள்**

ஜவுளி ஆலைகள், ஜின்னிங் தொழிற்சாலைகள், பவர்லூம் பதப்படுத்தும் தொழிற்சாலை, Surgical Cotton எனப்படும் மருத்துவத்திற்கு பயன்படும் பஞ்சாலைகள், தீப்பெட்டி தொழிற்சாலைகள், சிமெண்ட் தொழிற்சாலை ஆகியவை அடங்கிய முக்கிய தொழில் நகரமாகும் எங்கள் ஊர் இராஜபாளையம். பருத்தி சார்ந்த தொழில்கள் இங்கு செழித்தமையால் இது பருத்தி நகரம் என்று புகழ் பெற்றுள்ளது.

மேற்கு தொடர்ச்சி மலையின் சரிவில் அமைந்துள்ள ஐயனார் அருவி ஏராளமான நீர்வீழ்ச்சிகளையும் கோவில்களையும் உள்ளடக்கியது. இந்த வனப்பகுதி Mountain climbing, hiking போன்ற மலையேற்ற விளையாட்டுகளுக்கு நல்ல வாய்ப்பை வழங்குகிறது. அய்யனார் நீர்விழ்ச்சிக்கு செல்லும் வழியில் இரண்டு அணைகள் உள்ளன. இவை முழு நகரத்திற்கும் தண்ணீர் வழங்குகின்றன.

செண்பகத்தோப்பு Grizzled Squirrel எனப்படும் இராட்சத அணில்கலின் சரணாலயம் ஆகும். இது தென்மேற்கு பகுதியில் பெரியார் புலிகள் காப்பகத்தையும், வடமேற்கு பகுதியில் மேகமலை காப்பு காடுகளையும் ஒட்டி அமைந்துள்ளது.

இராஜபாளையத்தை சேர்ந்த திரு P.S. குமாரசாமி ராஜா அவர்கள் சென்னை மாகாணத்தின் முதல் முதல்வராக 1950-52 ல் பதவி வகித்தார். 1955-56 வரை ஒரிசா மாநிலத்தின் ஆளுநராகவும் பதவி வகித்தார்.

இராஜபாளையத்தின் மற்றொரு சிறப்பு வேட்டைக்கு பெரிதும் பயன் படுத்தப்பட்ட இராஜபாளையம் நாய் ஆகும். நல்ல உயரத்துடன் வெள்ளை நிறத்தில், இளஞ்சிவப்பு மூக்குடன் காணப்படும் இவ்வகை நாய்கள் தமிழகத்துக்கே உரிய நாய் இனங்களில் ஒன்றாகும்.

பிறந்தது முதல் சொந்த ஊரிலேயே வாழ்கின்ற பாக்கியம் எல்லாருக்கும் கிடைத்து விடாது. அப்படி அந்த வாழ்க்கை கிடைத்தவர்கள் மிகுந்த பாக்கியசாலிகள். மனித வாழ்க்கையானது மிகவும் குறுகியது, அந்த வாழ்வை நமக்கு பிடித்தபடியாக வாழ்வது மிகவும் அவசியமாகும். அதனை எங்கள் ஊர் எனக்கு வழங்கும் என்று நான் நம்புகிறேன்.

**-பிரவீணா ராம்**

# சிரிப்பு வந்தா சிரிங்க.

(ஞானம்பூர் கண்ணன்)

1. மிகவும் மக்கான ஊர் எது? மாமண்டூர்.

2. வருடத்தில் எத்தனை மாதத்தில் 28 நாட்கள் உள்ளது?
எல்லா மாதத்திலும் 28 நாள் உள்ளது.

3. மளிகைக் கடையிலே வேலை பார்த்தவனை மருந்துகடையிலே வேலைக்கு வைத்தது தப்பா போச்சு?
எதைச் சொன்னாலும் எத்தனை கிலோ வேணும்னு கேட்கிறான்.

4. காலில் சுத்தின பாம்பு கடிக்குமா – கடிக்காதா?
ஏன் கேக்கிறே?
உன் காலில் ஒரு பாம்பு சுத்தியிருக்குதுன்னு கேட்டேன்.


5. நீ ஏன் தொடர்ந்து ஒரே கடையிலே திருடுறாய்?
அந்த கடைக்கு நான் ரெகுலர் கஸ்டமருங்க!

6. மரியாதையில்லாத பூ எது? வாடா மல்லி


7. டாக்டர் நான் எதைப்பார்த்தாலும் இரண்டு இரண்டாத் தெரியுது?
சரி அந்த சோபாவிலே உட்காருங்க.
இரண்டு சோபா இருக்கே டாக்டர். எதுல உட்காரனும்.

8. பகல் கனவு பலிக்குமா டாக்டர்?
பலிக்காது ஏன் கேக்கறீங்க?
நீங்க ஆபரேஷன் செஞ்சு நான் பிழைக்கிற மாதிரி கனவு கண்டேன்.


# தமிழ்ப்பள்ளி மாணவர்களின் கைவண்ணம்!









கண்ணாமூச்சி
1. கண்ணாமூச்சி ஒரு எளிமையான விளையாட்டு ஆகும்.
2. ஒருவர் அல்லது சிலர் ஒளிய, ஒருவர் அவர்களை கண்டு பிடித்தல் இந்த விளையாட்டு ஆகும்.
3. இரண்டு பேர் முதற்கொண்டு எத்தனை பேரும் இதை விளையாடலாம்.


சதுரங்கம்
h g f e d c
1. இது அரசர்களின் விளையாட்டு என கருதப்படும்.
2. இவ்விளையாட்டு "மூளை சார்ந்த போர்க்கலை" யாகவும் பார்க்கப்படுவதுண்டு.
3. இது இருவர் மட்டுமே விளையாடும் விளையாட்டு.


நொண்டியாட்டம்
நொண்டி/பாண்டி யாட்டம் தென் இந்திய கிராமபுறங்களில் பிரபலமான
நிலத்தில் கட்டங்கள் வரைந்து அதில் குதித்து விளையாடுவது நொண்டியாட்டம்.
இந்த விளையாட்டில் கட்டங்களின் ஓரத்தில் கால் பதிக்காமல் குதிக்க வேண்டும்
இந்த விளையாட்டு உடல் தசைகளுக்கும் உடல் சமநிலைக்கும் மிகவும நல்லது.




பச்சக்குதிரை தாண்டுதல்
1. பச்சக் குதிரை என்பது சிறுவர்கள் விளையாடும் விளையாட்டு ஆகும்.
2. ஒரு சிறுவன் குனிந்து கொள்ள வேண்டும்.
3. வரிசையாக சிறுவர்கள் ஒவ்வொருவராக அவனைத் தாண்ட வேண்டும்.
4 சிறுவனின் இருபுறங்களிலும் தாண்டலாம்.
தன்வஷ் கமல்ராஜ்


பல்லாங்குழி

• பல்லாங்குழி என்பது மரம் அல்லது உலோகத்தால் ஆன ஒரு விளையாட்டுச் சாதனம்.

• இதில் இரு வரிசைகளில் ஏழு குழிகள் இருக்கும். இது இருவர் விளையாடும் விளையாட்டு.

• புளியங் கொட்டையை வைத்தோ அல்லது ஏதாவது பெரிய விதைகளையோ அல்லது சோழிகளையோ அரு பொருளாக வைத்து இவ்விளையாட்டு ஆடப்படுகிறது.

• ஒவ்வொரு குழிக்கும் ஐந்து காய்கள் பயன் படுத்த படுகிறது.

• பல்லாங்குழி விளையாடுவது மூலம் -


• அறிவுத்திறன் • மதிநுட்பம்
• கணக்கு • திக்கணம்
• சமாளிக்கும் திறன் • முடிவு எடுக்கும் திறன்

போன்றவை அதிகரிக்கும்.

• இந்தியா மட்டுமில்லாமல், வேறு பல நாடுகளில், வேறு பல பெயர்களிலும், பல்லாங்குழி விளையாடப்படுகிறது.

மகிழ்





## பம்பரம்

- பம்பரம் ஒரு தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டு.
பம்பரம் விளையாட நமக்கு பம்பரம் மற்றும் கயறு தேவை.

- விளையாட்டு விளையாடுவதற்க்கு முன்பு அவர்கள் தரையில் ஒரு வட்டம் இட்டு உள்ளே ஒரு கல்லை வைத்து பம்பரத்தால் அந்த கல்லை அடித்து, அடித்து கல்லை கட்டத்தை விட்டு வெளியே கொண்டு வருவதே இந்த விளையாட்டு.

- இந்த விளையாட்டு இப்போது மருவி BayBlade என மாறிவிட்டது

நன்றி



ல. வைபவ்




## பரமபதம்


1. பரம்பதம் ஒரு பாரம்பரிய பலகை விளையாட்டு.
2. இந்த விளையாட்டில் ஏணிகளும் பாம்புகளும் இருக்கும்.
3. தாயக்கட்டையை உருட்டி காய்களை நகர்த்தி ஏணியை அடைந்தால் உச்சிக்கும் பாம்பை அடைந்தால் வாலுக்கும் செல்ல வேண்டும்.
4. இவ்வாறு காய்களை நகர்த்தி கடைசி கட்டத்தை அடைந்து வெற்றி பெறலாம்.

- வசுந்தரா ராமசாமி





# தாயம் விளையாடுதல்



தாயம் தமிழ்நாட்டின் விளையாட்டு. இருவர் அல்லது இரு அணியினரோ விளையாடலாம். விளையாட்டின் இலக்கு என்பது எதிர் அணியின் காய்களை பற்றுவதே. மேலும், எல்லா வயது மக்களும் விளையாடுவதன் மூலம் பல பயன்கள் கிடைக்கும். சமயோதினப் புத்தி, கவனம், சிந்தனை, சமூக தொடர்பு போன்றவையை வளர்க்கவும் மற்றும் மனச்சோர்வை குறைக்கவும் உதவும்

விஸ்மயா சத்யநாராயணன்

# தமிழ் பாரம்பரிய விளையாட்டு

## கில்லி









கில்லி என்பது தமிழர்களின் பழைமையான விளையாட்டுகளில் ஒன்று. கிட்டிப்புள் கிட்டிக்கோல் ஆகியவை இந்த விளையாட்டுக்குப் பயன்படும் கருவிகள். இது மரத்தால் செய்யப்பட்டது. கில்லி குழுவாக அல்லது இரு அணியாக ஆடும் ஆட்டம். கிட்டிப்புள் மூன்றுவிரல் பருமனில் சிறிய அளவில் இரு முனைகளும் கூராக இருக்கும். கிட்டிக்கோல் இருவிரல் பருமனில் ஒரு அடி நீளம் கொண்டது. கில்லி ஆடும் அணியினர் கிட்டிப்புள்ளைக் கிட்டிகோலால் தட்டி பின் பறக்கும் போது அடிப்பர். எதிர் அணியினர் அதை பிடிப்பர்.



N. யாழினி பதி நரசிம்மன்
நிலை – உ.

# தமிழ்ப்பள்ளி புகைப்படங்கள்:













PUMA
























NEW YORK
USA



# நன்றி உரை

கதம்பம் இதழில் தங்கள் கதை, கட்டுரை, கவிதை மற்றும் பல பயனுள்ள விஷயங்களை இரிச்மண்டு சமூகத்துடன் பகிர்ந்து கொண்ட அணைத்து எழுத்தாளர்களுக்கும் தமிழ்ச்சங்க நிர்வாக குழுவின் மனமார்ந்த நன்றிகள்.

All submissions for Kadambam/கதம்பம் should be emailed to newsletter.rts@richmondtamilsangam.org by the **15th** of each month.

இந்த மாத கதம்பம் இதைழப் பற்றிய உங்கள் கருத்தை தெரிவிக்க விரும்பினால், இந்த படிவத்தின் மூலம் எங்களுக்கு தெரிவிக்க வேண்டுகிறோம்.

newsletter.rts@richmondtamilsangam.org எனும் மின்னஞ்சலிலும் எங்களை தொடர்பு கொள்ளலாம். நன்றி!



வாழ்க தமிழ்! வளர்க தமிழ் மக்கள்!

இப்படிக்கு,
சிவசக்தி அறிவுக்கண்ணன்,
செய்திமடல் இயக்குனர்.

# OUR PROUD SPONSORS




**ADD YOUR BUSINESS**

**ADD YOUR BUSINESS**

# website:

www.richmondtamilsangam.com

# contact us:

richmondtamilsangam@gmail.com
newsletter.rts@richmondtamilsangam.org
tamilschool@richmondtamilsangam.org